// மிக அவசரம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண்.5157/இ2/2019 நாள் .12.2019

பொருள் – பள்ளிக் கல்வி – அரசு உயர்/மேல்நிலைப்பள்ளிகளில இன்டர்நெட் மற்றும் கணினி வசதியுடன் கூடிய உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் ஏற்படுத்துதல் மற்றும் நிறுவுதல் – மாவட்ட அமைப்பிலான கண்காணிப்புக்குழு ஆய்வு செய்து அறிக்கை அனுப்பக் கோருதல் – சார்பு.

பார்வை – 1.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் , சென்னை–06 ந.க.எண்.76896/பிடி1/இ3/2017 நாள். 14.10.2019
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் ,நாள்.21.10.2019

---

வேலூர் மாவட்டம், அரசு உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள இன்டர்நெட் மற்றும் கணினி வசதியுடன் கூடிய உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் நிறுவுதலைக் கண்காணிக்கும் பொருட்டு மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் நிறுவப்பட்ட பள்ளிகளை ஆய்வு செய்து உரிய படிவத்தில் பூர்த்தி செய்து 3 நகல்களில் அனுப்பிவைக்குமாறும் மேலும் விநியோகப்பட்ட கணினி உபகரணங்கள் மற்றும் தளவாடச் சமான்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதனை கண்டறிந்து அதற்கான சான்றினையும் பெற்று அனுப்புமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் பார்வை 2ல் காணும் இவ்வலுவலக செயல்முறை கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. நாளது தேதிவரை ஆய்வு அறிக்கை ஏதும் பெறப்படவில்லை மேலும் 26.12.2019 அன்று இயக்குநரகத்திற்கு ஆய்வு அறிக்கையின் தொகுப்பினை சமர்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளதால் சார்ந்த கல்வி மாவட்ட கண்காணிப்பு குழுவினரிடமிருந்து பெற்று உடன் அனுப்பிவைக்குமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: கண்காணிப்பு குழு விவரம்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
மாவட்டக் கல்வி அலுவலர்
வேலூர் / அரக்கோணம் / இராணிப்பேட்டை /
திருப்பத்தூர் / வாணியம்பாடி